**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS.255/2023

பெயர் : கருணாகரன் (DW1) (Cross )

த/க/பெ. :

தேதி : 10.02.2026

ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

OS. 182/2023 பாக பிரிவினை வழக்கு போட்டு அது விசாரணைக்கு பின்னர் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மயிலாடுதுறையில் மேல்முறையீடு தாக்கல் செய்துளேன். மேல் முறையீடு செய்துள்ளதாக நகல் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சொத்துக்கள் வாய் மொழி பாகம் பிரிக்கப்பட்டட்டுள்ளதாக அந்த வழக்கு தள்ளுபடி செய்யயபட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்துக்களை OS. 182/2023 வழக்கில் நான் குறிப்பிட்டிருந்தேன் என்றால் சரிதான். சுப்புபடையாச்சியின் சொத்துக்கள் அவரது வாரிசுகளான கஞ்சமலை, கோவிந்தராசு, அரங்கசாமி அனைவருக்கும் பாகம் உள்ளது என்றால் சரிதான். சுப்புபடையாச்சியின் படையாச்சியின் சொத்துக்கள் அவரது வாரிசுகளுக்கும் வாரிசுகளின் வாரிசுகளுக்கும் உரிமையானது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் தான் OS. 182/2023 வழக்கில் 2 முதல் 4 வாதிகளை 8 முதல் 10 பிரதிவாதிகளாகவும் முதல் வாதியை 13 வது பிரதிவாதியாக சேர்த்துள்ளோம் என்றால் சரிதான் . காரைமேடு கிராமம் புல எண். 206/3 , 24 ஏர்ஸ், 103/2D ல் .23 1/2 செண்ட் எங்களால் தென்னலக்குடி வைத்தியநாதசாமி என்பவரிடம் விற்கபட்டுள்ளது என்றால் ஏற்கனவே சுப்பு படையாச்சியன் வாரிசுகள் அனைவரும் சேர்ந்து காரைமேடு கிராமத்தில் இருந்து ஒரு சொத்தை விற்றுள்ளார்கள் அதை இந்த வழக்கில் சேர்க்கவில்லை. கஞ்சமலை பெயரில் பட்டா இருந்ததால் தான் விற்கப்பட்டது என்றால் சரிதான். கஞ்சமலை பெயரில் பட்டா இருந்தாலும் அவருக்கு மட்டுமே சொத்து உரிமை இல்லை என்றால் சரியல்ல. கஞ்சமலைக்கு மற்றும் அவரது நேரடி வாரிசுகளுக்கு மட்டுமே உரிமைய உடையதா என்றால் ஆம். பி.வா.சா.ஆ.1 ஆவணப்படி சரவணன் என்பவருக்கு 28.03.2005 ல் காரைமேடு வட்டம் புல எண். 262/1 ஏ, ல் 1 .06 ஏக்கர் கிரயம் செய்யப்பட்டுள்ளது அந்த சொத்தின் பட்டா கஞ்சமலை பெயரில் இருந்தது என்றால் சரிதான். ஆனால் அரங்கசாமி, விசாலம் சேர்ந்து தான் விற்கபட்டுள்ளது என்றால் அவர்கள் கையெழுத்து மட்டும் தான்

போட்டார்கள். என் பிரமாண வாக்குமூலத்தில் சுப்பு மகன்கள் கஞ்சமலை, கோவிந்தராசு, அரங்கசாமி அவரவரர் தனிப்பட்ட வருமானத்தை கொண்டு சொத்துக்ளை வாங்கி உள்ளதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அந்த சொத்துக்களும் கஞ்சமலை பெயரில் தான் UDR பாட்டா உள்ளது என்றால் சரிதான். சாட்சி மீண்டும் தனிப்பட்ட முறையில் வாங்கபட்டா சொத்துக்களுக்கு அவரவர் பெயரில் பட்டா உள்ளது என்று கூறுகிறார். பி.வா.சா.ஆ.3 என் சகோதரர் இளவரசன் பெயரில் ஏற்பட்டுள்ளது. அந்த ஆவணப்படி சர்வே எண். 117/13 ல் 5/6 பிரிபடாத பாகம் இளவரசனுக்கு கொடுக்கபட்டுள்ளது என்றால் சரிதான். மோட்டார் சர்வீஸ் வாங்குவதற்காக குடும்பத்தில் ஏற்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. அதில் பாரதி சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். கஞ்சமலை நீண்ட காலமாக சொத்துக்களை அனுபவித்து வந்ததன் அடிப்படையில் UDR பட்டா அவர் பெயரில வழங்கப்பட்டதாக என் பிரமாணாவாக்கு மூலத்தில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். கஞ்சமலைக்கு பெயரில் பட்டா உள்ளதால் மட்டுமே அவருக்கு சொத்துகள் உரிமை உடையது அல்ல என்றால் சரியல்ல. UDR பட்டாவை பயன் படுத்தி வாதிகளுக்கு உரிமை உடைய பல சொத்துக்களை நாங்கள் விற்பணை செய்துள்ளோம் என்றால் சரியல்ல. மோசடியாக வாதிகளுக்கு உரிமை உடைய சொத்தையும் கஞ்சமலை பெயர் மாற்றம் செய்துள்ளதால் அந்த பட்டாக்கள் செல்லக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. மோசடியாக பட்டா மாறுதல் செய்திருந்தால் அது பட்டா பாஸ்புக் சட்டத்தின் கீழ் வராது என்றால் சரியல்ல. செம்பதனிருப்பு புல எண். 77/10, 77/4 ராமலிங்கம் என்பவருக்கு அரங்கசாமி விற்பணை செய்துள்ளார். அந்த சொத்திற்கு அரங்கசாமி பெயிால் பட்டா இருந்ததுஎன்றால் UDR பட்டா இருந்தது, அந்த பத்திரத்தில் என் சகோதரர் மனோகரன் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். குடும்ப சொத்துக்கள் குறித்து பட்டா பதிவு செய்யப்படும் போது குடும்ப உறுப்பினர் ஒருவர் பெயரை குறிப்பிட்டு மற்றும் பலர் என்று குறிப்பபிட வேண்டுடம்எ ன்றாலுரும் அவ்வாறு இல்லாததால் நாங்கள் சொத்துக்களை விற்பணை செய்துள்ளோம் என்றால் சரியல்ல. சுப்பு படையாச்சியின் சொத்துகளுக்கு கஞ்சமலை மற்றும் இருவர் பெயரில் பட்டா பதிவு செய்யாமல் கஞ்சமலை பெயரில் மட்டுமே பதிவு செய்ததது தவறு என்றால் சரியல்ல. OS. 356/2023 இந்த நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். OS, 204/2023 வழக்கு OS. 112/2020 வழக்கும் போடப்பட்டு

நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் போட்ட அனைத்து வழக்குகளிலும் 2 ம் வாதிக்கு அல்லி விளாகம் முகவரி தான் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**